In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தைப்பூச மலர் அன்பளிப்பு

8-2-1990

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

With the Compliments of

CHANSUN & PEARSE (MARKETING) PTE. LTD.

545, ORCHARD ROAD, #03-24
FAR EAST SHOPPING CENTRE
SINGAPORE 0923
TEL: 7325410 FAX: 7337946
TELEX: RS 37388 CHANSN

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மலர் தொகுப்பு:

ஐந்தாம் தைப்பூச மலர் வெளியீடு

சிங்கப்பூர் ஸ்ரீ தெண்டாயுதபாணி தொண்டர் குழு

சிங்கப்பூர். 8-2-1990

Printed by
APEX PRINTINGS
430, Race Course Road, Singapore 0821.
Tel: 2969942 & 2988645

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விநாயகர் வணக்கம்

—□—

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்கு
சங்கத் தமிழ்மூன்றும் தா. —தமிழ்முதாட்டி

யானை வயிற்று விநாயகனே ! — உடன்
பக்தரைக் காத்திடும் மூலவனே !
முழுமுதற் பொருளாய் வந்தவனே ! — சின்ன
மூஷிக வாகன ஐங்கரனே !

மோனத் தவத்தில் இருப்பவனே ! — நல்ல
மோதகப் பிரியா கணேசா !
யானை முகத்தை உடையவனே ! — எமை
அணைத்துக் காத்திட வந்திடுவாய் !

கொழுக்கட்டை படையல் போட்டதுமே
குறையாத செல்வம் தருபவனே !
கருப்பட்டிப் பணியாரம் படைத்தாலோ
கனக மழைநீ பெய்திடுவாய் !

அரச மரத்தின் அடியிருந்தே — இந்த
அகில உலகமும் கணக்கெடுப்பாய் !
மாட்டுச் சாணத்தில் உருவெடுப்பாய் ! — நல்ல
மஞ்சளிலும் நீ வந்திடுவாய் !

காக்கை வடிவில் வந்தவனே ! — நல்ல
காவிரி தன்னைத் தந்தவனே !
யாக்கை உந்தன் அடிபாவ —'ஓம்
அரோகரா' சொல்லி பாடுகிறோம் !

தம்பி முகழைப் பாடுகையில் — ஐயா !
தமையன் நீயும் இல்லாமலா ?
தும்பிக்கை கொண்ட விநாயகரே ! — நல்ல
நம்பிக்கை தந்து காத்திடுக !

— கவிஞர் மேலை முருகப்பா B.Com.,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிங்கப்பூர் தெண்டாயுதபாணி

தமிழ்வணக்கம் டாக்டர் சபா. அருணாசலம்

அன்னைத் தமிழே அருணாசலக் கவிஞன
உன்னை வணங்கிஎன் உயர்பாட்டைத் தொடங்குகிறேன்
மன்றில் கடல்கடந்த மாமுருகன் புகழ்பாட
என்நாவில் வாநீ இனிது
அங்கயற் கண்ணியோடு ஆலவாய் அண்ணல்
தங்கத் தமிழ்வளர்க்கும் தென்பாண்டி மதுரையிலே
மங்கை மீனுளின் மகன்புகழைப் பாடுதற்கு
கங்கை ஆறுபோல் கவியேத்தி வந்துள்ளேன்
தேவ கோட்டையிலே திருவகைப் பிறந்தேன்
சேவுகனார் கல்லூரிச் செந்தமிழா சிரியன்
குன்றக்குடி முருகனைக் குலதெய்வம் எனப்போற்றும்
தொண்டியார் வீட்டில் தோன்றி வந்தவன்நான்
அருணாசலக் கவிஞன் அண்ணாமலையார் மாணாக்கன்
இருகரங்கள் கூப்பிஎன் ஆசானை வணங்குகிறேன்

கங்கை யாறென்றன் கவிதை என்றுசொன்னேன்
கங்கையாறு பிறந்தஇடம் கைலாய மலையென்றால்
இந்தக் கவியாறு எந்தமலை உற்பத்தி!
அந்தமலை இந்தமலை ஆசிரியர் அண்ணாமலை
அண்ணாமலைத் தமிழால் அருணாசலக் கவிபெருக
எந்நாளும் அவர்பாதம் ஏத்தித் தொழுவேன் யான்!

கருமுத்து தியாகராசர் கலைத்தந்தை ஆவார்கள்
கருமுத்து மிகச்சமத்தர்! காரியத்தில் கெட்டிக்காரர்!
அவரின் சமத்தென்ன! ஆலியிலே தெரிகிறதா?
அவரின் சமத்துமதுரை வங்கியினால் தெரிகிறதா?
இல்லையில்லை ...இன்னொன்றால் தெரிகிறது...

மாமதுரை Publication. Digitized by Muthulakshmi Research Academy
நாம்வணங்கும் பரங்குன்றம் நல்மலையாம் ஓர்புறத்தில்
ஆனைமலை ஒருபக்கம் நாகமலை ஒருபக்கம்
முத்தமிழ் மதுரையிலே முப்புறமும் மலையுண்டு
தெப்பக்குளம் பகுதியிலே தெரிசிக்க மலையில்லை

நான்மாடக் கூடலுக்கு நாலுபுறம் மலைகாண
வான்புகழும் ஓர்மலையை வரவழைத்தார் கருமுத்து
அந்தமலை எந்தமலை ஆசான் அண்ணாமலை
பைந்தமிழில் மேருமலை பண்பில் இமயமலை
அண்ணா மலையாரின் அடிதொழுது இவ்வரங்கில்
என்பாட்டைத் தொடங்குகிறேன்..

தக்கார் சிதம்பரனார் தமிழ்ப்பற்று மிக்கார்
சித்திரை முதல்நாளைச் செந்தமிழுக்கு ஒதுக்கியவர்
ஆயிரம்பேர் பணங்கட்டி அவரவர்கள் வரிசையிலே
வாயிலிலே தேர்இழுக்க வந்துகாத் திருந்தாலும்
தங்கத்தேர் வடம்பிடிக்கத் தமிழ்ப்புலவர் வருகவென
எங்கள் நெஞ்சில் இடம்பிடித்தார் இசைத்தமிழால்
வணங்குகின்றேன்!

எங்களை இங்கழைத்து இனிய தமிழாலே
கந்தன் புகழ்பாட வைத்துக் காவடி அருள்பவர்யார்?
செக்கச் சிவந்தநிறம் சிந்தையெலாம் கந்தன்வசம்
சக்தி தரிசனமும் சண்முக தரிசனமும்
பக்தர்க்கு அருளுகின்ற பழனி வழிகாட்டி

பட்டயக்காரர் மடத்தில் பல்லாயிரம் பேருக்கு
அட்டியின்றி வடித்து அன்னதானம் செய்திடுவார்
இத்தனையும் சாதாரண மனிதர் இயற்றும் செயலாமோ!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முத்தும் மாணிக்கமும் முறை நிரம்பும் பொருள் வளமும்
வைத்துள்ளார் அன்றே வையகத்தில் செய்திடலாம்
முத்துமாணிக்கம் முருகனுக்கு மொத்த அருள் ஏஜண்டு!
பெயரில் இருமணிகள் முத்தும் மாணிக்கமும்
உயர்வான உள்ளம் ஒளிரும் தனி வைரம்
பக்தர்க்கு இவரோ பச்சை வயலாவார்
முத்துமாணிக்கனுர் மேனியோ தளிப்பவளம்
நீலமயில் வாகனனே நிதமெழுதும் மைநீலம்
காலமெலாம் கவிஞர்க்கு கருணைக் கோமேதகம்
கொடுத்துச் சிவக்கும் கை கூட்டுமொய்ப் பழனிக்கு
அடுத்தடுத்து அன்பரை அழைத்துச் செல்லும்சிவரத்தினமரம்
நவமணியும் இவரிடத்தில் நாளும் குடியிருக்கும்

தவமுடையார் அதனலே தமிழில் பற்றுடையார்
காவடி முருகனுக்குக் கடமையென ஆண்டுதோறும்
பாவடியால் கவியரங்கம் படைத்து மகிழ்கிறார்
அன்பர் முத்துமாணிக்கம் அண்ணன்தாள் வணங்கி
தென்பழநி ஆண்டவனின் திருவருளே வேண்டுகிறேன்!
மதுரையிலே மட்டும் மாற்றம் தடுமாற்றம்
புதுமாற்றம் பலஉண்டு! புவியினிலே மதுரையிலே
கால் மாற்றி ஆடினார் சிவபெருமான்தான்
கால்மாறி ஆடியதும் கருணைப் பேரன்பால்
பேர்மாற்றி வைத்துள்ளார் பெரிய தெருவரிசையில்
சித்திரை முதல் தொடங்கிச் செந்தமிழ் மாதங்கள்
அத்தனையும் பெயராய் அமைப்பதே முறையாகும்
ஆடி முதலில்வரும் அடுத்தது சித்திரை
ஆடி சித்திரை அப்புறமா ஆவணி வரும்
சித்திரை ஆடி ஆவணி என்றாலும் பரவாயில்லை
இப்பெயர் மாற்றம் ஏன்? ஏன் இதனை ஆடியென்றார்!
ஆடிக் காற்றினிலே அம்மியும் ஆடுமென்பார்
பாடும் தமிழ்கேட்டுப் பலர்தலையும் ஆகாஆகா என்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆடி அசைவதனால் ஆடிவேந்தி என்றாரா ?
பாடும் தமிழெல்லாம் பரமனுக்குக் கண்ணடி!
ஆடியென்றால் கண்ணடி அம்மைக்கும் அப்பனுக்கும்
ஆடிவீதியன்றோ அழகான கண்ணடி!
எனக்கும் எப்படி என நாள் பார்க்க வேண்டின்
இப்படி ஓர் கண்ணடி எடுத்து நான் பார்ப்பேன்!
பாடும் புலவரெல்லாம் பரமனும் பாவையும்
ஆடும் அழகெல்லாம் அப்படியே வடித்துரைக்க
அங்கயற்கண் மீனாட்சி ஆலவாய் அண்ணலுக்குத்
தங்கள் திருக்கோலம் தானறியக் காட்டுகிற
ஆடிகண்ணடி ஆடிவீதி யென்றோ
ஆடியினை முதலாக அருகிலிலே வைத்துள்ளார்.
ஆடிவீதியினிலே ஆடும் தமிழருவி
கூடிக் குளிப்பவரே கும்பிட்டு வணங்குகிறேன்
டிவிசினிமாவும் தியாகம் செய்துவிட்டு
ஆவலுடன் வந்தவரே! அரங்கில் நிறைந்தவரே!
குமரன் திருவருளைக் கூட்டம் பெறுகவென
தமிழாலே நான் தொழுது தலைப்புக்கு வருகின்றேன்!
என்ன அன்பு என்மீது அண்ணலுக்கு
அன்பாலே இத்தலைப்பை அடியனுக்குத் தந்துள்ளார்
சிங்கப்பூர் தன்னைச் சென்று பார்த்த றியாத
என்னைச் சிங்கப்பூர் எழில் முருகெ பாடென்றார்
அண்ணன் வாக்காலே அடியேனும் சிங்கப்பூர்
செல்லும்நாள் விரைவில் வரும்சிவன் மகனும் துணை
வருவான்
தொலைக்குச் செல்பவர்க்குத் துயரம் தானெழிய
வழிக்குத் துணையாக வருபவன்தான் வடிவேலன்
கப்பல் தனிலேறிக் கடல் தாண்டிச் சென்றவர்க்கு
எப்போதும் துணையாக இருப்பவர்தான் வடிவேலன்
மனைவிதனைப் பிரிந்தாலும் மக்களினைப் பிரிந்தாலும்
கனவிலும் வடிவேலன் கழல்தன்னைப் பிரிவதில்லை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உசிவமயம் ஒருநாளும் எழுதாமல் நகரத்தார்
பேரு கணக்குதனைப் பேரேட்டில் எழுதாது.
கடல்தாண்டிப் போனாலும் கரைதாண்டிப் போகாத
இயல்புடையார் நகரத்தார் எல்லோரும் சொல்லுகின்றார்
பெட்டியடி ஆளாய்ப் பெருந்தொலைவு போகையிலே
புத்தியென மூன்றைத்தான் புறப்படுங்கால் சொல்வாராம்
செட்டிக் கப்பலுக்குச் சென்றாரான் துணையாவான்

ஒட்டிவரும் பழமொழியை உரைப்பார் முதன்முதலாய்
எழுதாமல் கொடுக்காதே என்பதை அடுத்தமொழி
எழுதியதன் பின்னாலே எச்செலவும் செய்க என்றார்
கொடுக்காமல் எழுதாதே கூறும் மூன்றும் மொழி
அடுத்துக் கொடுக்காமல் அவர் பணத்தைக் கொடுக்காமல்
இன்னார்க்குக் கொடுத்ததாய் எழுதுவது தவறென்றே
அன்றைக்கு அறிவுரைகள். அப்பச்சிமார் சொல்வார்
சாமிக்குப் பயமும் சத்தியமும்தான் நம்இனத்தை
பூமியிலே இன்றைக்கும் புகழோடு காக்கிறது
முதலாளி பார்க்காவிட்டால் முதல்மோசம் போகுமென்று
முதலாளி அருகிலிருக்க முடியாத வேளையிலும்
முதல் ஆளாய் முருகனையே முதலாளி ஆக்கிவிட்டார்
முதலாளி முருகன் எப்போதும் அருகிருப்பான்

தொடங்கி வைத்தசித நம்குலத்தார் பழனிக்கு
நடந்தகதை சொன்னார்கள் முன்பு நடந்தகதை சொன்னார்
ஒரு திருடன் தொழில் தொடங்க ஒருநாள் போகையிலே
பிள்ளையார்

வருவாயில் பாதி வழங்குகிறேன் எனத்தொழுதான்
திருடிய பர்சில் இருந்தது ஐம்பதுரூபாய்
சரிபாதி இருபத்தைந்து தரவேண்டும் உண்டியலில்
பார்த்தான் திருடன் பளிச்சென்று ஓர் எண்ணம்
பார்த்தாயா பிள்ளையாரே பாதியை நீமுன்பே எடுத்துக்
கொண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஐம்பதை மட்டும் எனக்கு அனுப்பினும் எனதருமை
நூறப்பா ஆக உனக்கு தீர்ந்தது கணக்கு
அப்படியா நகரத்தார் ஆலயம் தனக்குப்
பக்தியுடன் முதலில் பங்கை அளித்திடுவார்
தெண்டாயுதபாணி வரவென்று இறந்தவுடன் முதல்வரியில்

இன்றைக்கும் வரவெழுதும் இப்பழக்கம் நமக்குண்டு
மகமை எழுதுகிறார் மகமை என்றால்
மகத்திற்கு உரியது மகமைப் பணமாகும்
மாசிமகத்தினிலே மகரூஸ்வரபூசை
மாசில்லா வேலனுக்கு மலை மலையாய்ச் சோறிட்டு
வேலுக்குப் பூசையிடும் வேள்வணிகர் குடும்பத்தில்
காலகாலமாய் மகமை கட்டாயம் எழுதுகிறார்

மகமைப் பணத்தினிலே மலேயா சிங்கப்பூர்
திகழ்முருகன் கோவிலிலே தினப்பூசை நடக்கிறது
மகமை எழுதுவதே மலைப்பழனி வேலனுமே
மிகப்போற்றும் கடல்வணிகர் மேலான பக்திகாட்டும்
என்றெல்லாம் சொன்னாலும் என் கவியால் எப்படிதான்
சிங்கப்பூர் முருகனைச் செந்தமிழால் காட்டுவேன்?
காணுத காட்சியெலாம் காட்டுகிற கந்தா
தரும் மதுரையிலே மேலான கவியரங்கில்
சிங்கப்பூர் எழுந்தருளும் தெண்டாயுதபாணி உன்
தங்கமுகம் தனைக்காட்ட தகுந்தவழி காட்டென்றேன்

அன்றிரவு என்கனவில் அழகன் ஆறுமுகன்
தன்கோலம் காட்டித் தட்டி எழுப்புகிறார்
அட்டா ஓ அட்டா ஆறுமுகத் தழகும்
படரும் திருத்தோள் பனிரண்டு தனியழகும்
பொங்கும் கருணைமலர் பூத்தவிழி பனிரெண்டு
என்கண்கள் காண என்முருகன் அருள்புரிந்தான்
எப்படிநான் பாடுவேன் எழில் முருகன் கோலத்தை
எப்படிநான் அளந்தறிவேன் என்தலைவன் பேரழகை
என்றுநான் உச்சிமுதல் எழில்முருகன் பாதம் வரை
கண்டுகண்டு களிக்கையிலே கேட்டேன் ஓர் ஐயம்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஐயா முருகா ஆறுமுகம் உன்றனுக்கு
பொய்யாத அருட்கைகள் பன்னிரண்டு உன்றனுக்கு
கைகள் பனிரெண்டு! கால்மட்டும் ஏன் இரண்டு?
ஐயம் தோன்றியதை அலனிடத்தில் கேட்டேன்
எல்லாம் பக்தருக்காய் என்றுரைத்தான் வேலவனும்
சொல்லுவதை விளக்கமாய்ச் சொல் முருகா எனக்
கேட்டேன்
எல்லாத் தமிழ்நூலும் இறைவன் திருத்தாளைச்
சென்று பற்றுக எனச் செப்புவதைக் கேட்டாயா?
இருகைகள் நீட்டி என்பக்தன் ஓடிவந்து
திருவடிகள் பற்றத் தேடிவரும் நேரத்தில்
இரண்டு திருவடிகளை இறுகப் பற்றிடுவான்
இரண்டுக்கு மேலிருந்தால் எங்கு போவான் கைகளுக்கு?
பக்தனுக்கு இரு கரமே பாரில் இருப்பதனல்
முக்திதர இருபாதம் முருகனுக்குப் போதும் என்றான்!
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றுமென
முருகன் அன்பரெலாம் முழங்குவதை அறியாயா?
எங்கெங்கு இருந்தாலும் எங்கே யழைத்தாலும்
சிங்கப்பூர் என்றாலும் செட்டிநாடென்றாலும்
அங்கங்கே எழுந்தருளி அருள்புரிவேன் நானென்று
சிங்கப்பூர் முருகன்என் செவிதுளிரச் சொல்லுகின்றான்
வேலே சிங்கப்பூரில் விளங்கும் அருள்வடிவம்
வேலில் பதுமை விளக்கம் செய்கின்றாய்
தனிவேலே அங்கே தண்டபாணி என
இன்றைக்கும் கும்பிட்டு எல்லோரும் தொழுகின்றார்
சிங்கப்பூர் டாங்க்ரோடு செட்டிமுருகன் படைவீடு
இன்றைக்கு நக்கீரன் இங்குவந்து மறுபடியும்
ஆற்றுப்படை பாட வந்தால் ஆறுமுகன் மிக விரும்பிப்
போற்றுமிடம் சிங்கப்பூர் புதுவீடு என்றுரைப்பார்
சிங்கப்பூர் படைவிடை செல்வம் கொழிக்கின்ற
கந்தன் படைவீடு காணவருக என்பார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓவியமாய்க் கட்டடமாய் உயர்ந்த மேடையிலே
காவியம்போல் பளிங்கினிலே கண்டிடலாம் தனிவேலே!
வேலே கடந்தவர்கள் வேலே நம்பித்தான்
காலகாலமாய்க் கடையங்கு நடத்துகிறார்.
சிங்கப்பூர் வெள்ளிரதம் சித்திரத் தேரழகு
கண்கோடி வேண்டும் காண்பதற்கும் பேரழகு!
மார்க்கெட் பிள்ளையார் கோவில் மருங்கிருந்து நகரத்தார்
ஏற்றமுடன் வெள்ளிரதம் இழுக்கின்றார் பைதப்பூசம்
நகரத்தார் காவடிகள் நம்பழனி மலைபோல
சிங்கப்பூர் வீதிகளில் ஜெயம் முழங்க வருகிறது!
ஆடிவரும் காவடிகள் அழகுதனைப் பார்ப்பதற்குக்
கோடிமக்கள் குறைதீர வேண்டுகிறார்
ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பதென
வாழ்க்கையிலே தாம்வாழ்ந்து பார்த்தவர்கள் நகரத்தார்
கார்த்திகைக் கட்டென்று தண்டபாணி கோயிலிலே
கார்த்திகைத் திருநாளில்
மலைமலையாய்ச் சோறுவடித்து மலைப்பழனி வேலவனை
வழிபடுவார் நகரத்தார்! வரங்கொடுப்பான் வடிவேலன்!
வெள்ளி விழாயாடும் சிங்கப்பூர்ச் சீன மயிலும்
வள்ளல் அருள் விழாயாட்டு வடிவேலன் செய்கின்றான்
''சிங்கப்பூர் முருகா'' சிங்கப்பூர் முருகா என்று
எத்தன் குரல் ஒலிக்க எதிர்வந்தான் வடிவேலன்
என்னையும் உங்கள் இனத்தில் சேர்த்துவிட்டாயா?
என்றே முருகன்தான் எனைப்பார்த்து முகச்சிரித்தான்

என்ன முருகா என்னமுருகா எனக் கேட்டேன்!
என்னப்பா என்னை நீ எப்படி அழைத்தாய்?
சிங்கப்பூர் முருகா என்றேன் சிரித்தாய் முருகா
கம்பார் ராம கண்டி பழ. தைப்பிங் சித. ஈப்போ சோ
கொழும்பு சுப என்று கூப்பிடுவதைப்போல்
என்னையும் கம்பார் முருகன் சிங்கப்பூர் முருகன்

CC-0. Mumukshu Bhawan Varanasi Collection. Digitized by eGangotri
Digitized by Muthulakshmi Research Academy

வந்து சேரும்மோரான் வினைத்தீர்த்து ஆட்கொண்டு
என்னையும் செட்டியாய் இன்றுநீர் ஆக்கி விட்டீர்
என்றுரைத்தான் முருகன் எங்கேநீர் போனாலும்
அங்கே நான் வருவேன் என்று ஆறுமுகன் தானுரைத்தான்
சிங்கப்பூர் முருகன் சேவடிகள் நான்தொழு தேன்
என் கவிதை கேட்டோர்கள் எல்லார்க்கும் என்நன்றி

ஆறுமுகசாமி விருத்தம்

ஆறுமுகமும் பன்னிரண்டு கையும் வேலும்
அலங்கார ஆபரணம் அணிந்த மார்பும்
திருமுகமும் வெண்ணீறும் புனைந்த மெய்யும்
ஜெகமெலாம் புகழ்படைத்தாய் சுப்ர மண்யா
முருகா சரவண பவனே கார்த்திகேயா
முக்கண்ணர் புத்திரனே உக்ர வேலா
இருவருமே உனைப் பணிந்தோம் பழனிவேலா
இதுசமயம் அடியாரை ரட்சிப்பாயே.

மயிலேறி விளையாடும் சுப்ர மண்யா
வடிவேலா உன்பாதம் நம்பினேனே
உயிரிழந்து அபகீர்த்தி ஆகும் வேளை
உன்செயலால் இதுசமயம் உயிரைக்காத்தாய்
தயவாக இனிமேலும் உயிரைக் காத்து
சண்முகனே அடியார்தம் துயரம்தீர்ப்பாய்
வைபோகம் ஆனமலை பழனிவேலா
வரமளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே.

வருந்தும் அடியார்உயிரைக் காக்கும்தெய்வம்
வையகத்தில் வேறெருவர் இல்லைஎன்று
அறிந்துநான் உனைப்பணிந்தேன் சுப்ரமண்யா
ஆதரித்துப் பிராணபயம் தீரும்ஐயா
திரிந்தலைந்து அறுமூன்று திங்களாகச்
சிறையிலிருந்து தளைப்பூண்டு சின்னமானேன்
பறந்துவரும் மயிலேறும் சுப்ரமண்யா
பண்பாக உயிர்காத்து ரட்சிப்பாயே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
பெருவேங்கைப் புலிபிடித்த பசுவைப்போல
பிதுர்கலங்கி மனந்தளர்ந்து புலம்பினேமே
இருவருமே உனக்கூவச் செவிகேளார்தோ
இதுசமயம் தாமதமா யிருக்கலாமோ
குருவாகித் தந்தையாய் நீயேயாகில்
குமரேசா பிராணபயம் தீரும்ஐயா
முருகேசா இதுசமயம் பழனிவேலா
முன்வந்து உயிர்காத்து ரட்சிப்பாயே.

பாம்பின்வாய் சிக்கியதோர் தேரைப்போல
பதைபதைத்து வாடுகின்ரேம் பாலர்நாங்கள்
தேம்பியே புலம்புகிரேம் துயரமாகி
தென்னவனே உன்செவிக்கு கேளாதோதான்
நான்புவியில் உனைநம்பி மகிழ்ந்திருந்தேன்
நாயேனுக்கு அபாயம்வர நியாயமோதான்
சாம்பசிவன் புத்திரனே பழனிவேலா
சமயமிது உயிர்காத்து ரட்சிப்பாயே.

வலையில்அகப்பட்ட உயிரதுபோல் மயங்குகிரேமே
வடிவேலா இதுசமயம் துயரம்தீர்ப்பாய்
கொலைகளவு பாதகங்கள் பொய்யிருந்ததெல்லாம்
கொடும்பழிகள் வஞ்சனை பில்லிசூனியமெல்லாம்
தொலையாத சிறுபிணிநோய் வல்வினைகளெல்லாம்
துறந்துமையா மயிலேறும் சுப்ரமண்யா
மலையிலுறை வாசனே பழனிவேலா
வரமளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே.

நாகமது கருடனைக் கண்டலைந்தாற் போல
நான்பயந்து அலைதுரும்பாய் அலைகின்றேனே
தாகமது தீருமையா தவிக்கும் வேளை
சண்முகனே இதுசமயம் அடியேனுக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேகமது பயிர்க்குதவி செய்தாற்போல
வேலவனே பிராணபயம் தீருமையா
வேகமுடன் வரவேணும் பழனிவேலா
விணைதீர்த்து உயிர்காத்து ரட்சிப்பாயே.

பூனைகையிற் சிக்கியதோர் கிளியைப்போல
புலம்புகிறேம் பிராணபயம் மிகவுமாகி
நானடிமை உனைநம்பி இருக்கும்வேளை
நாயகனே பாராமுகமாய் இருக்கலாமோ
மானீன்ற வள்ளியம்மை தெய்வயானை
மணவாளா சரவணனே கருணை செய்வாய்
கானமயில் வாகனனே பழனிவேலா
கடவுளே உயிர்காத்து ரட்சிப்பாயே.

தூண்டிலகப்பட்ட உயிரதுபோல் துடிக்கின்றேனே
சுப்ரமண்யா இதுசமயம் அடியேனுக்கு
வேண்டுவரம் கொடுப்பதற்குப் பார்த்துநீயே
வேறொருவர் இல்லையென்று நம்பினேனே
மீண்டுவரும் விணைதீர்த்துத் துயரம் தீர்ப்பாய்
வேலவனே சூரசங் காரவேலா
ஆண்டவனே உனைப்பணிந்தேன் பழனிவேலா
அடியார்கள் உயிர்காத்து ரட்சிப்பாயே.

நஞ்சுபட்டு விஷமேறி மயங்குமாப் போல்
நடுநடுங்கி கிடுகிடென்று பயந்து நாங்கள்
தஞ்சமென்றே உனைப்பணிந்தோம் திருத்தணிகைவாசா
சற்குருவே பிராணபயம் தீருமையா
பஞ்சகனைச் சிறைவிடுத்துத் தலையை வாங்கி
பரிகரித்து உன்னிருதாள் பதமே தந்து
வஞ்சனைகள் செய்யாமல் பழனிவேலா
வரமளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்திமுகனே முக்கண்ணனுக்கு இளைய வேலா
அறுமுகனே தணிகையிலே அமர்ந்த வாசா
வித்திறத்தில் பேசாத மூடன் நானும்
வேலவனே நின்னருளால் கவியைப் போல
பத்துமே பதிகமாய்ப் பாடிச் சொன்னேன்
என்மீதில் பிழைகள்மனம் பொறுத்தே ஆள்வாய்
சத்தியமாய் உனைப்பணிந்தோம் எங்கள் ஐயா
சண்முகனே அடியாரை ரட்சிப்பாயே.

குமரனுட வேலு இது

குன்றுதோர் ஆடிவரும் குமரனுட வேலுஇது
கூடிவரும் பக்தர்களின் குறைதீர்க்கும் வேலுஇது
மயூர வாகனனின் மரகத வேலுஇது
மருதமலை ஆண்டவனின் மகத்தான வேலுஇது
கார்போல பெழிகின்ற கார்த்திகேயன் வேலுஇது
கூறும்அடி யார்கள்வினை தீர்க்கவந்த வேலுஇது
சங்கடங்கள் தீர்க்கவரும் சண்முகனின் வேலுஇது
தண்டனைகள் அகற்றிவிடும் தண்டபாணி வேலுஇது
குன்றக்குடி தனிலே குடியிருக்கும் வேலுஇது
மன்றம் விளங்கவரும் மன்னனுட வேலுஇது
பழநிமலை நோக்கி பறந்துவரும் வேலுஇது
கழநியிலே நிற்போரின் கண்துடைக்கும் வேலுஇது
சிக்கல் நகர்தனிலே சிரித்துவாழும் வேலுஇது
எக்கலைக்கும் மன்னனுன நம்தலைவன் வேலுஇது
அண்டிவந்த பேருக்கெல்லாம் அபயமளிக்கும் வேலுஇது
கண்டிகதிர் காமத்தோன் கனிவான வேலுஇது

கும. கரு. ராம சொக்கலிங்கம் செட்டியார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவனிசிப் பத்து

வற்றுத பொய்கை வளநாடு கண்டு
மலமே லிருந்த குமரா !
உற்றுர் எனக்கு ஒருபேரும் இல்லை
உமையாள் தனக்கு மகனே !
முத்தாடை தந்து அடியேனை ஆளும்
முருகேசன் என்ற அரசே !
வித்தார மாக மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே !

ஆலால முண்டோன் மகனுகி வந்து
அடியார் தமக்கும் உதவி!
பாலூரல் உண்டு கனிவாய் திறந்து
பயனஞ் செழுத்தை மறவேன் !
மாலான வள்ளி தனைநாடி வந்து
வடிவாகி நின்ற குமரா !
மேலான வெற்றி மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே !

திருவாசல் தோறும் அருள்வேத மோத
சிவனஞ் செழுத்தை மறவேன் !
முருகேசன் என்று அறியார் தமக்கு
முதலாகி நின்ற குமரா !
குருநாத சுவாமி குறமாது நாதர்
குமரேசன் என்ற பொருளே !
மறவாமல் வெற்றி மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே !

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உதிரம் திரண்டு பனியீரல் உண்டு
உருவாசல் தேடி வருமுன்
ததிபோல் எழுந்த திருமேனி நாதர்
கடைவீடு தந்தும் அருள்வாய்!
முதிரஞ்சிறந்த வயல்வீறு செங்கை
வடிவேல் எடுத்த குமரா!
யதிராய் நடந்து மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே!

மண்ணுடும் ஈசன் மகனுரை உந்தன்
மலிவீடு தந்தும் அருள்வாய்!
வண்டுரல் பாயும் வயலூரில் செங்கை
வடிவேல் எடுத்த குமரா!
நன்ருக வந்தே அடியேனை ஆண்டு
நல்வீடு தந்த குகனே!
கொண்டாடி வெற்றி மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே!

நீலஞ் சிறந்த குறமாது வள்ளி
நின்பாகம் வைத்த குமரா!
காலன் எழுந்து வெகுபூஜை செய்து
கயிறும் எடுத்து வருமுன்
வேலும் பிடித்து அடியார் தமக்கு
வீராதி வீர ருடனே
சாலப் பரிந்து மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே!

தலைகட்ட நூலின் நிழல்போல நின்று
தடுமாறி நொந்து அடியேன்
நிலைகெட்டு யானும் புவிமீதில் நின்று
நெடுமூச் செறிய விதியோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அலைதொட்ட செங்கை வடிவேற் கடம்பா
அடியேனை ஆளும் முருகா!
மலையேறி மேயும் மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே!

வண்டுண்டு பூவில் மதுவூரில் பாயும்
வயலூரில் செங்கை வடிவேல்
கண்டொன்று சொல்லித் திரிவார்கள் வாசல்
கடனென்று கேட்க விதியோ?
வண்டுறு பூவில் இதழ்மேவு வள்ளி
தெய்வானைக் குகந்த வேலா!
நன்றென்று சொல்லி மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே!

விடதூதர் ஓடிவரும்போது உம்மை
வெகுவாக நம்பி னேனே!
குறமாது வள்ளி இடமாக வைத்து
மயிலேறி வந்த குமரா!
திடமாகச் சோலை மலைமீதில் வாழும்
திருமால் தமக்கு மருகா!
நடனஞ் சிறந்த மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே!

ஓங்கார சக்தி உமைபால் குடித்து
உபதேசம் உரைத்த பரனே!
பூங்கா வனத்தில் இதழ்மேவு வள்ளி
புஜமீ திருந்த குகனே!
ஆங்கார சூரர் படைவீடு சோர
வடிவேல் விடுத்த பூபா!
பாங்கான வெற்றி மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆறுது மாறு வயதான போது
அடியேன் நினைத்த படியால்
வேறேது சிந்தை நினையாமல் உந்தன்
ஆசார சங்கம் அருள்வாய் !
அசுரேசர் போல எமதூதர் என்னைத்
தொட்டோட கட்ட வருமுன்
மாறுது தோகை மயில் மீது லேறி
வரவேணும் என்றன் அருகே !

கையார உன்னைத் தொழுதேத்த மனது
கபடேது சற்றும் அறியேன் !
ஐயாஉனக்கு ஆளாகும் போது
அடியார் தமக்கும் எளியேன் !
பொய்யான காயம் அறிவே ஒடுங்க
உயிர்கொண்டு போக வருமுன்
வையாளியாக மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே !

ஏதேது ஜென்மம் எடுத்தேனே முந்தி
இந்தப் பிறப்பில் அறியேன் !
மாதா பிதாநீ மாயன் தனக்கு
மருகா குறத்தி கணவா!
காதோடு கண்ணை இருளாகமூடி
உயிர் கொண்டு போக வருமுன்
வாதாடி நின்று மயில்மீது லேறி
வரவேணும் என்றன் அருகே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெள்ளிமலைக் கந்தர் விளக்கம்

—□—

அரனுடைய நெற்றியில் அறுபொறிக ளாகவே
ஆங்கார மாயுதித் தாய்
அண்டம் நடுங்கிட வேசண்ட மாருதம்
அகிலபுவ னங்கள் சுற்றி
அறம்பொருள் விளங்கவே உமையவள் கரத்தினில்
ஆறுமுக ளுயுதித் தாய்
அன்பான கார்த்திகை பாலமிர்தம் உண்டவா
அழகுபெற வந்த பாலா
சரவணப் பொய்கையில் பலவித லீலையும்
சரச உல்லாச குமரா
தரணிபுகழ் மெய்யனே தாமரை இலையினில்
சரவணனே துயில்கொண்டவா
வீரசெக நாதனே ஞானப்பிர காசனே
வந்திடுங் கந்த வேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே. 1

தங்கமுடி கிரீடம் சென்னியில் சொலிக்கவே
செங்கவடி வானதுரையே
சிங்கார வேல்முதல் பன்னிரண் டாயுதம்
செல்வனே தாங்கி நின்றுய்
அங்கமதில் வெண்ணீறும சந்தனக் கதம்பமும்
அணியும்பட் டாடை ஒளியும்
அழகான மார்பினில் மோகனப் பதக்கமும்
அரும்புமண மாலை யுடனே
செங்கடகம் தண்டைமணிகிண்கிணி சதங்கையும்
செவிகளணி குண்டலங்கள்
செம்பவள வாயனே எங்கள்குல தெய்வமே
செநதா மரைப்பாதனே
வேங்கைமலை கங்கையும் தாங்கிவரும் காங்கேயா
வந்திடும் கந்த வேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே. 2

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சீனிகற்கண்டுடன் அவல்பொரி கடலையும்
தேன்பாலும் முக்கனி களும்

சீரான கொடிமுந்திரி ஆரஞ்சுக் கனிகளும்
திராக்ஷையும் இள நீருடன்

இனிப்பான எலுமிச்ச மாதுள விளாங்கனி
இன்பரஸ கொளஞ்சிப் பழமும்

இனமுல்லை மல்லிகை சண்பகம் சாமந்தி
எவரோஜா பன்னீ ருடன்

மாநிலம் துதிக்கவே புனுகுசவ் வாதுடன்
மருவும் மருக்கொ முந்தும்

அபிஷேகம் செய்யவே தீபதூ பங்களுடன்
மனமகிழ வேபோற்று வேன்

இனியவடி வேலனே கலிகாலன் ஓடவே
வந்திடுங் கந்த வேளே

வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே. 3

பிரணவ வேதத்தின் பொருள்கூறத் தெரியாத
பிரமனைச் சிறையில் வைத்தாய்

பரமனுக் குபதேச மருள்ஞான மூர்த்தியே
பாராள வந்த அரசே

முறைகளது தவருத சகல லோகங்களும்
முத்தொழில் புரிந்த தேவா

முனிவர்கள் தேவர்கள் கண்டு தயங்கிய
முச்சுடராய் நின்ற தேவா

சூரனைச் சிதைக்கவே இந்திரன் முதலான
தேவர்கள் முறை கூறவே

சாரதி ஆகவே மாருதம் தேர்கொண்டு
செல்கிரூர் முருகையனும்

வீரபட்டங்களும் நெற்றியில் துலங்கவே
வந்திடுங் கந்த வேளே

வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே. 4

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கனபேரிகை நாகசுரம் சங்கு சேகண்டியும்
கனக வாத்தியம் முழங்கக்
கைலமலை விட்டு நீ தேவர்படை சூழவே
கதிர்வேல் எடுத்து வந்து
மனவேக ரதமேறி வீரர்படை சூழவே
மகேந்திரம் அமர்ந்த வாசா
மாயா வீதாரகன் சூரபத்மன் முதல்
மாவேலால் சங்கரித்தாய்
வனமயிலின் கர்த்தனே தக்ஷிணு மூர்த்திஎன்
வறுமையைத் தீர்க்க வருவாய்
வலியாரை வாட்டியே எளியாரை ரக்ஷிக்க
வரவேணும் குகநேசனே
வானவரிடர் களைந்தவா இந்திரன் முடியேற்றி
வைத்திடுங் கந்தவேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே. 5

அன்னையாள் குறைதீர நந்தவனம் காக்கவே
ஆறுமுகம் காத்த லிங்கம்
ஆனமுதல் மந்திரம் மலையாளச் சின்னனே
அடிமையாய்க் கொண்ட லிங்கம்
உன்னையே யான்விடக் கதியொன்று மில்லையே
உத்தண்ட கார வீரா
உள்ளன்பு கொண்டுநான் உன்றனது இணையடியை
ஒருபோதும் மறவேன் ஐயா
துன்னவயல் மேருகிரி செந்திநகர் எட்டுக்குடி
சென்னிமலை மேவு முருகா
சுக்கிலமாம் சஷ்டிதிதி ஐப்பசித் திங்களில்
சூரசங் கார முருகா
விண்ணதிரு பண்டிதா கண்டிகதிர் காமனே
வந்திடுங் கந்த வேளே
வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே. 6

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோலைக்கிளி வேல்விழியாள் வள்ளி பங்காளனே
துள்ளுமயி லேறுமுருகா

துஷ்டரிடம் சிக்கிநான் தவித்திடும் வேளையில்
துணைபுரிய வாநீ முருகா

அலைகடல் சூழ்புவனம் மாங்கனிக் கிசைந்துவலம்
அரைநொடியில் வந்தமுருகா

அய்யன் பிடாரியொடு கும்பபடை யாவரையும்
அடக்கிவச மாளுமுருகா

காலந் துலங்கிவர மேலமுக வாசகா
நீலமயி லேறுமுருகா

ஔவையார்க் கருள்புரிய கோக்களே மேய்த்துநீ
நாவல்மரம் ஏறுமுருகா

வாலிமகன் சீலனே தணிகாசலம் விட்டுநீ
வந்திடுங் கந்த வேளே

வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே. 7

அம்புவியர் கொண்டாடும் ஆண்டிப் பண்டாரனே
அஞ்ஞானம் தீர்த்தருளுவாய்

அத்திமுகனுக் கிளைய சக்தி வேலாயுதா
அசுரரைப் பொடி செய்தவா

இன்பதுன்பங்களால் இறப்பும் பிறப்புமே
எந்நாளும் மாறி வருதே

இனிப்பிறப்பில்லாமல் பேரின்ப வீடடைய
மெய்ஞ்ஞானம் தாரு முருகா

செம்புலிங் கையனே தேவாதி தேவனே
செகமாளும் மயில் வீரனே

சீர்மேவும் சரவணையில் மச்சமாய்த் திரிந்திடும்
தேவர்களின் சாபம் தீர்த்தருள்வாய்

வெம்புனித வளநாடு திருவேளூர் மேவியே
வந்திடுங் கந்த வேளே

வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே 8

CC-0. Public Domain. Digitized by eGangotri Muthulakshmi Research Academy

எத்திசை யோர்களும் வாழ்த்திடும் பழனியிலே
எங்கும் நிறைந்த பொருளே

ஈராறு கையனே பன்னிரு விழியனே
ஏழைப்பங் காள வீரா

சித்துவிளை யாடுவாய் முத்துலிங் கையனே
செச்சைவா கனுவருகுவாய்

சடாக்ஷர மந்திரா இருமூன்று அக்ஷரா
சங்கீத வீணை யழகா

பக்தியுடன் தினகாலம் கடுகளவு நினைவோர்க்கு
பாலன்வடி வேலன் வருவான்

பித்தனவன் புத்திரா சப்தசங் காரனே
புலவருனைப் போற்று முருகா

வாத்திய முழங்குவே கைலமலை விட்டுநீ
வந்திடுங் கந்த வேளே

வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே. 9

பேயிருளன் காட்டேரி சடாமுனி இராக்ஷதர்
பூதப் பிசாசு களுமே

பேதமுறும் சாமுண்டி சங்கிலிக் கருப்பனும்
பாதகமாய் எனை மிரட்ட

தயவாக உன்பெயரை ஷண்முகா வென்றிடச்
சாட்டையால் ஓட்டிவிடுவாய்

தம்பனம் மாரணம் வசியமுதல் பில்லியம்
சூனியம் வைத்த பேரை

தீயவன் வேரறச் சிவசுப்ர மணியனே
சூரமயிலேறி வந்து

சூலத்தால் குத்தியே மீளாத நரகினில்
செல்லவே தள்ளி விடுவாய்

வாய்வேகமாகவே சேவற்கொடி பறக்கவே
வந்திடுங் கந்தவேளே

வெள்ளிமலை வேல்முருகா வினைதீர்த்து ரக்ஷிப்பாய்
வேலாயுதக் கடவுளே 10

In Public domain. Digitization-Muthulakshmi Research Academy

செந்தில் ஆண்டவன் தரிசன மகிமை

—□—

வீதிசுற்றிக் கீழ்புறமும் கடலும் கண்டேன்
விஸ்தாரக் கொடிமாமும் அங்கே கண்டேன்
ஆதியெனும் மூலமதை அங்கு கண்டேன்
அடியேனும் செந்தில்நகர் வலமாய் வந்தேன்
நீதிபுகழ் கோபுரமேற் புறத்திற் கண்டேன்
நிச்சயமாய் உனதழகைக் காண வேண்டி
ஆதியெனும் கடற்கரையில் வந்து நின்று
ஆதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே

மந்தாரை பிச்சிமுல்லை வனமும் கண்டேன்
மணல்மேட்டு குவட்டழகு மலையுங் கண்டேன்
வந்தவர்நோய் பிணிதீர்க்கும் வளமும் கண்டேன்
வருந்துகின்ற அடியார்க்கு வரமீயக் கண்டேன்
சிந்தாநவ மணிவிளக்கு ஒளியுங் கண்டேன்
திருச்செந்தூ ராதிபனைக் காண வென்று
அந்திரமாய்க் கடற்கரையில் வந்து நின்று
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே

நாழிநல்ல கிணறுதன்னை நானும் கண்டேன்
நன்மைபெற தீர்த்தமது ஆடிக் கொண்டேன்
வாழிசொல்லு மறையோர்கள் தன்னைக் கண்டேன்
மண்டபமும் திருமதிலும் செந்தூரும் கண்டேன்
கோழியெனும் சேவல்மயில் தன்னைக் கண்டேன்
குமரனிரு தாளிணையைக் காண வென்று
ஆழியெனும் கடற்கரையில் வந்து நின்று
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூன்றுசுத்து மண்டபமும் சுற்றிப் பார்த்தேன்
முன்னாலே வீரபத்ரன் தன்னைக் கண்டேன்
நானுமே டீலைக்குடவு பெருமாள் கண்டேன்
நல்லவள்ளி சன்னதியும் பிறகு கண்டேன்
தேனுடன் பாலாபிஷேகம் செய்யக் கண்டேன்
சிவனுர்தம் பாலகனைக் காண வேண்டி
ஆனதொரு கடற்கரையில் வந்து நின்று
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே

ஆறுமுக நமினுர்தன் அழகு கண்டேன்
அவருடைய சண்முகவி லாசங் கண்டேன்
கூறுமடி யார்கள்வினை தீர்க்கக் கண்டேன்
குன்றுருவ வேல்வாங்கி நிற்கக் கண்டேன்
வேறுவினை யணுகாமல் இருக்கக் கண்டேன்
வேலவனுர் தம்பதத்தைக் காண வென்று
ஆறுதலாய்க் கடற்கரையில் வந்து நின்று
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே

மங்களம்சேர் தெய்வானை தன்னைச் கண்டேன்
மதகரியும் வாசலிலே வரவும் கண்டேன்
பங்கயம்சேர் பன்னிருகை வேலும் கண்டேன்
பதைக்கமுத்து சரப்பளிகள் தன்னைக் கண்டேன்
தங்கமயக் கோபுரத்தில் தீபங் கண்டேன்
சங்கரனுர் பாலகனைக் காண வேண்டி
அங்கசங்கக் கடற்கரையில் வந்து நின்று
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே

மாசிமாதம் திருவீதிசுத்தி வரவுங் கண்டேன்
மனிதர்க்கெல்லாம் மடத்திலன்னம் வழங்கக் கண்டேன்
தேசிக்காய் சப்பரத்தின் சாயல் கண்டேன்
தினந்தினமும் பூச்சரங்கள் தூவக் கண்டேன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாசனையாம் பெரியோர்கள் தனைக் கண்டேன்
வள்ளியுட கணவனே நான் காணவென்று
ஆசையாய்க் கடற்கரையில் வந்து நின்று
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே

மாசிமகம் ரதமேறி வரவுங் கண்டேன்
மனிதரெல்லாம் கூடிவடம் பிடிக்கக் கண்டேன்
தேசிக்காய் சப்பரத்தின் சாயல் கண்டேன்
திருவருளும் பூச்சரங்கள் தொங்கக் கண்டேன்
நீதிபுகழ் சண்முகவி லாசங் கண்டேன்
நிச்சயமாய் உனதழகைக் காண வேண்டி
ஆதியெனும் கடற்கரையில் வந்து நின்று
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே

கஞ்சமலர் தாளிணையை நானுங் கண்டேன்
கதிர்வேலும் சூலமுமுன் கையிற் கண்டேன்
செஞ்சமதிர் வேதியர்சம் பத்தும் கண்டேன்
தினந்தினமும் சந்தனாபி ஷேகம் கண்டேன்
வஞ்சமெனும் மாயமதை நீக்கக் கண்டேன்
மனதறிய உந்தனைநான் காணவேண்டி
அஞ்சலெனும் கடற்கரையில் வந்துநின்று
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே

சகத்திலுள்ளோர் உன்பாதம் பணியக் கண்டேன்
தினந்தினமும் மறையோர்கள் துதிக்கக் கண்டேன்
சுகத்திலேநான் அடியேன் இருக்கக் கண்டேன்
துயரமெல்லாம் உன்பாதம் செல்லக் கண்டேன்
மகத்திலே ரதத்திலே வரும்அழகு கண்டேன்
மனதறிய உனதழகைக் காண வேண்டி
அகத்தியமாய்க் கடற்கரையில் வந்துநின்று
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வண்ணமயில் வாகனத்தில் வரவுங் கண்டேன்
மறையோர்கள் தினமும் அன்னம் புசிக்கக்கண்டேன்
திண்ணமுடன் வள்ளிமனை தனையுங் கண்டேன்
தினந்தினமும் பள்ளியறை சேரக் கண்டேன்
கின்னரர்தம் பூர்வீணை முழங்கக் கண்டேன்
கிலேசமெல்லாம் தீர்ந்துஉன்னைக் காண வேண்டி
அன்னம்போல் கடற்கரையில் வந்து நின்று
அதிரூப தெரிசனங் கண்டருள் பெற்றேனே.

வேலன் கும்மி

(கவிஞர் ம. முகமதுமைதீன்)

ஆடிவரும் வடிவேலவனைத் தினம்
அள்ளி அணைத்திட வாருங்கடி — மலர்
சூடிவரும் இசை யானவனின் கையைச்
சுற்றிப் பலமுத்தம் தாருங்கடி — ஆடி

தங்கஒளிச் சுடர்ச் செந்தமிழில் — அவன்
தங்கி இருப்பதைப் பாருங்கடி — சுரம்
பொங்கி வழிகின்ற தென்பாங்கில் — கட்டிப்
பொன்னெளிர் மேனியைக் கூறுங்கடி — ஆடி

ஓமெனும் மந்திரம் தந்தவனை — மலை
உச்சியில் வாழ்தமிழ்ச் சிந்தவனை — இசை
வாம்புனற் கும்மியில் பாடுங்கடி — தினம்
வட்டமிட்டே நடம் ஆடுங்கடி — ஆடி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆடுக ஊஞ்சல் ஆடுகவே

(மெ. மெ. மெ. M. Sc,)

ஆடுக ஊஞ்சல் ஆடுகவே
அய்யா முருகா ஆடுகவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே
அய்யா முருகா ஆடுகவே

ஆழிப் படுக்கை கொண்டோனின்
அருமை மருகா ஆடுகவே !
ஊழி தாண்டி நிற்பானின்
உத்தமச் செல்வா ஆடுகவே

வாழும் மனிதர் யாவருக்கும்
வழிக்குத் துணையாம் வேலவனே
ஆளுங் கவலை ஒடிடவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே

ஆடகப் பொன்னால் ஊஞ்சலிட்டு
அதற்கு வயிரக் கயிறுமிட்டு
கூடிடும் அடியார் ஆட்டிடவே
குமரா ஊஞ்சல் ஆடுகவே

பாடுகள் குறைந்தே பக்தரெல்லாம்
பண்பால் உயர்ந்தே வாழ்ந்திடவே
வாடிடும் பயிர்கள் வளம்பெறவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே

முன்னே பின்னே சென்றாலும்
முடிவில் ஒன்றி நின்றிடுமே
என்னே வாழ்க்கை என்றாலும்
எல்லாம் உன்னைச் சுற்றியதே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குன்றுக் குடியாய் எமைமக்காக்கும்
குன்றக் குடியின் வடிவேலன்
கண்ணே மணியே கதிர்வேலா
கவினுர் ஊஞ்சல் ஆடுகவே

விண்ணவர் செல்வி தெய்வானை
வேடவர் மகளாம் வள்ளியுடன்
மண்ணகம் சுற்றும் மயிலேறி
மேதகு சேவற் கொடியாட

கொண்டிடும் காதல் உணர்வோடு
கனிந்த நெஞ்சத் தூஞ்சலிலே
அன்புடன் ஏறி இனிதமர்ந்தே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே

மண்ணைப் பிளந்து பெரும்பேட்டில்
மாபெரும் அருளுடை வடிவுடனே
பெண்ணின் நல்லார் இருவருடன்
பெருமயில் ஏறி வந்தவனே

கண்ணே தெரியாக் காட்டிடையே
கலங்கித் தவிக்கும் எங்களுக்கே
உன்னுல் வழியும் தெரிந்துயர
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே

ஆறடி நெடிதாம் உருவுடனே
அடியார் பக்தி உருவேற்ற
பேரருள் கொண்டாய் பெரும்பேடா
பிள்ளை நலிவினைப் பேர்க்கிடவே
சீரடி வணங்கிட வந்துள்ளோம்
செல்வா அருளினைத் தந்திடுக !
ஆரிருள் விலகி ஒளிபெறவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே

□

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆடுக காவடி

(புலவர் இராம. வீரப்பன்)

ஆடுக காவடி ஆடுகவே
அழகு மயிலாய் ஆடுகவே
ஆடுக காவடி ஆடுகவே
அழகு மயிலாய் ஆடுகவே

குலமும் நலமும் வளர்ந்திடவே
குற்றங்க ளெல்லாம் தளர்ந்திடவே
பழநி நோக்கி வருகின்ரோம்
பாலுக் காவடி ஆடுகவே —ஆடுக

காலை மாற்றி ஆடுகையில்
கந்தன் புகழைப் பாடுகையில்
பாலை நிலமும் குளிருதையா
பன்னீர்க் காவடி ஆடுகவே — ஆடுக

காவடிச் சிந்து பாடுகின்ரோம்
கார்த்திகை பாலனைத் தேடுகின்ரோம்
பூவடி சிவக்க ஒடிவந்தோம்
புஷ்பக் காவடி ஆடுகவே — ஆடுக

குழந்தை வேலன் சன்னதியில்
கொடுக்கும் கரத்தை வளமாக்க
இளமை முருகாய் வாழுகின்ரூய்
இளநீர்க் காவடி ஆடுகவே — ஆடுக

மண்ணும் விண்ணும் வாழ்ந்திடவே
மாதவன் சிறப்பைப் பாடி நாமும்
சண்முக தெரிசனம் கண்டிடவே
சந்தனக் காவடி ஆடுகவே — ஆடுக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
காட்டை இங்கு விறகாக்கி
கடிய விரதம் உறவாக்கி
ஆட்டம் போட்டுக் காணவந்தோம்
அக்கினிக் காவடி ஆடுகவே — ஆடுக,

விரதம் பூண்டு தூக்கிவந்தோம்
வியர்வை மழையில் குளித்துவந்தோம்
பரங்கிரி வாழும் பெருமானின்
பறவைக் காவடி ஆடுகவே — ஆடுக

தும்பிக்கை தம்பி துணையாலே
தெம்பாய் நாங்களும் நடைபோட்டு
பம்பை உடுக்கை முழங்கிவர
பாம்புக் காவடி ஆடுகவே — ஆடுக

கல்விக் கடலைக் குடித்திடவும்
கற்றவர் போற்ற வாழ்ந்திடவும்
செல்வம் யாவும் கூடிடவும்
சேவற் காவடி ஆடுகவே — ஆடுக

தேனூர் தமிழின் இசைகேட்டு
தெய்வ யானை மனமகிழ
மானுய் வள்ளி துள்ளிவர
மச்சக் காவடி ஆடுகவே — ஆடுக

புண்ணுய்க் கால்கள் நொந்தாலும்
பொறுக்கா வெயிலில் வெந்தாலும்
சண்முக நாதன் துணைநாட
சர்க்கரைக் காவடி ஆடுகவே — ஆடுக

கேடும் பிணியும் மாய்ந்திடவே
கீழ்மைச் செயல்கள் ஒய்ந்திடவே
நாடும் வீடும் வாழ்ந்திடவே
நமது காவடி ஆடுகவே — ஆடுக

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆவினன் குடியிலோர் ஆண்டி

(கவிஞர் மேனு. முருகப்பா, B. Com.,)

ஆவினன் குடியிலோர் ஆண்டி
ஆவினன் குடியிலோர் ஆண்டி — அவன்
ஆவியில் மேவியே குடியிருப் பாண்டி

புரியாத நிலையிலே நிற்கும்
புரியாத நிலையிலே நிற்கும் — எம்மைப்
புரிந்தவ ராக்கிடப் புறப்பட்டு வாவா

மயிலோடுநீ ஆடும் ஆட்டம்
மயிலோடு நீஆடும் ஆட்டம் — எங்கள்
மனதிலே எந்நாளும் பூஞ்சோலைத் தோட்டம்

வள்ளிமயில் தேவானை யோடு
வள்ளிமயில் தேவானை யோடு — இங்குஐயன்
வரவேண்டும் வரவேண்டும் ஒங்கிநீ பாடு

சொல்லிலே வருபவனும் நீயே
சொல்லிலே வருபவனும் நீயே — என்றும்
எல்லிலும் இருட்டிலும் எம்துணை நீயே

உற்றங்கள் சுற்றங்கள் வேண்டாம்
உற்றங்கள் சுற்றங்கள் வேண்டாம் — உண்மையாய்
உள்ளங்கள் சிலதந்தால் போதும்

கவிதைகள் பாடினேன் நானும்
கவிதைகள் பாடினேன் நானும் — எம்மைக்
கண்ணேக்கிப் பார்க்கவே இல்லையே நீயும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
சொல்லுவது உன்னுடைய நாமம்
சொல்லுவது உன்னுடைய நாமம் — மதுரைச்
சொக்கனின் மைந்தனே இன்னுமேன் கோபம்

துன்பத்தில் எந்நாளும் துவண்டு
துன்பத்தில் எந்நாளும் துவண்டு — தொழுது
துடிக்கின்ற மலர்களுக்கு நீதானே வண்டு

கல்லாகி நிற்பதும் நன்றே?
கல்லாகி நிற்பதும் நன்றே? — பக்தர்
எம்மோடு வாதாட முடியாது என்றே?

இன்னமும் தாமதமேன் ஐயா?
இன்னமும் தாமதமேன் ஐயா? — முருகா
எந்நாளும் உன்நாமம் சொல்லுவதும் பொய்யா?

கல்லென்ன முள்ளென்ன கந்தா!
கல்லென்ன முள்ளென்ன கந்தா! — உயிர்க்
கருத்தோடு உன்நாமம் மனத்திலே வந்தால்

தணிகைமலை சுவாமிமலை நாதன்
தணிகைமலை சுவாமிமலை நாதன் — உளப்
பிணியகல நலம்விளையப் பிடித்திடவன் பாதம்

பரங்குன்றம் பழமுதிரும் சோலை
பரங்குன்றம் பழமுதிரும் சோலை — உன்
பாலைவன வாழ்க்கையிலே அவன்தானே சோலை

செந்தூரு வள்ளலை நம்பு
செந்தூரு வள்ளலை நம்பு — பிறவித்
துன்பத்தைப் போக்கிடவே செலுத்திடுவான் அம்பு

தத்தன்னேம் தத்தன்னேம் போடு
தத்தன்னேம் தத்தன்னேம் போடு — தம்பி
தண்டாயுத பாணி பதத்தையே நாடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எந்நாளும் காப்பாற்றும் தெய்வம்
எந்நாளும் காப்பாற்றும் தெய்வம் — அவன்
இருபாதம் தனைப்பணிய உன்வாழ்வு உய்யும்

என்னென்ன பாடியும் என்ன ?
என்னென்ன பாடியும் என்ன ? — இன்னுமே
உன்னருள் கிடைக்கவே இல்லை

படியிறங்கி நீவரவும் வேண்டும்
படியிறங்கி நீவரவும் வேண்டும் — உனக்குப்
பல்லாண்டு பாடிஉன் பாதம்தொழ வேண்டும்
மயிலோடு வேலோடு வருக !
மயிலோடு வேலோடு வருக ! — எம்
உயிரோடு கலந்தவனே அருள்அள்ளித் தருக !

□ □ □

With the Compliments of

NIPPON TRADERS

67, High Street, #02-07 Satnam House,
Singapore 0617. Tel: 3389572, 3368119.
Telex: NIPTEX RS 34569, Cable: NIPTEX
Colombo Court P. O. Box 644, Singapore 9117.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்பன் பழநி அப்பனடா

(கவியரசு கண்ணதாசன்)

அப்பன் பழனி அப்பனடா — அவன்
அரும் பெரும் திரவியக் கப்பலடா
அற்புதம் காட்டும் தலைவனடா — அவன்
அன்புக்குப் பணி செய்யும் இறைவனடா !

கரண்போம் நாம்அவன் படைவீடு — தம்பி
கால்வலி மறந்து நடைபோடு
கண்டால் நமக்கில்லை ஒருகேடு — நீ
காவடி எடுத்து நடமாடு !

வணிகனின் குலத்துக்குத் தாயாவான் — அவர்
வலைவினில் ஓடிடும் சேயாவான்
கவிஞர்கள் பாட்டுக்கு வாயாவான் — எங்கு
கடும்பகை கண்டாலும் தீயாவான்

ஆண்டிக்குப் பாரடி சாத்துப்படி — நாம்
ஆடிடப் பழநியில் தீர்த்தமடி
வேண்டிடும் வாம்தரும் தீபமடி — இதில்
வேதனையே இல்லை லாபமடி

பழநிக்குப் போவதில் சுகமதிகம் — அவன்
பார்வையில் நிற்பதில் குணமதிகம்
விழுந்து வணங்கிஞல் வயததிகம் — அந்த
வீரன் தருவான் பணமதிகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செட்டி மக்கள் இந்தப் பூமியிலே—பல
தெய்வத்துக் களித்தது கோடியம்மா !
கட்டிய கோயில்கள் ஆயிரமே ! — அதில்
கந்தனின் கோயில்கள் யாவையுமே !

முருகப்ப னில்லாத ஊருமில்லை—ஒரு
முத்தைய னில்லாத வீடுமில்லை
பழனியப்ப னின்றி வம்சமில்லை—எங்கள்
பரம்பரைக் கவனின்றி அம்சமில்லை

கால்நடைப் பயணத்தில் ஓடிவந்தேன் — உன்
கருணைக்குத் தானுனைத் தேடிவந்தோம்
வேலெமைக் காக்கட்டும் வேலவனே ! — உன்
வழிஎமைக் காக்கட்டும் நாயகனே !

□ □ □ □

With the Compliments
of

M/S SAM-PLUS MANUFACTURING (PTE) LTD

Block 4012, #04-10
Ang Mo Kio Industrial Park 1
Singapore 2056. Tel: 4587566

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பழநி மலையினிலே.....

(கவிஞர் மேனு. முருகப்பா B. Com.,)

பழநி மலையினிலே — அவன்
பாலில் குளிக்கையிலே
பார்க்க ஓடி வந்தோம் — திருப்
பாட்டுப் பாடி வந்தோம்

பஞ்சா மிர்தத்திலே — ஐயன்
பக்குவ மாயிருக்க
நெஞ்சம் இனிக்க வந்தோம் — அவன்
நினைவில் களித்திருந்தோம்

விபூதிப் பொட்டலத்தில் — ஐயன்
விரும்பிக் குடியிருக்க
பூக்கள் தூவி வந்தோம் — பொன்
அடியைப் போற்ற வந்தோம்

குங்குமப் பொட்டலத்தில் — குற
வள்ளி தேவயானை
தங்கி வாமருள — இரு
தாயின் பதம்பணிந்தோம்

இழநி பன்னீரு — இன்னும்
எத்தனை அபி ஷேகம்
பழநி நாதனுக்கு — தினம்
படைத்து நாம் மகிழ்ந்தோம்

பயணப் பாதையிலே — அவன்
பக்கத் துணையிருக்க
பயமும் ஏது முண்டோ? — காதம்
பலவும் நாம் கடந்தோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தையின் பூசத்திலே அவன்
தங்கரதம் காணப்
பைய நடத்து வந்தோம் — அவன்
பாதம் தொழுக வந்தோம்

துன்பச் சுமைகளையே நாம்
தூக்கி நடந்து வந்தோம்
இன்பச் சுமையாக — கந்தா
இங்கு வர வேணும்

நன்செய் புன்செய்களாம் — இங்கு
நாளும் செழித்துயர
உன்னைப் போற்றுகிறோம் — நீ
உயர்வு தர வேணும்

கால காலத்திலே — நல்ல
கார் மேகக் கூட்டம்
பாலாய்ப் பொழியோணும் — பூமிப்
பயிர் செழிக்கோணும்

ஊரு மக்களெலாம் — நல்ல
ஒற்றுமையாய் வாழ
வரம் தர வேணும் — கந்தா
வளம் தர வேணும்

சேவற் கொடி பறக்க — உயர்
குன்றம் தனில் அமர்ந்தோய்
வாழி உன் நாமம் — என
வாழ்த்தி முழக்க மிட்டோம்

மயிலின் மீதினிலே — நம்
மன்னவன் பவனிவர
உயிரில் கலந்தவனே — ஒன்று
கூடிப் பணிய வந்தோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாதை நெடுகிலுமே — அவன்
பக்தர்கள் கூட்டம்வர
வாதை வருவதுண்டோ?—வடி
வேலவன் துணையிருக்க

ஒரு பத்து நூறெனவே — பக்தர்
ஆயிரம் லட்சம்வர
வருவதில் தாமதமோ?—வடி
வேலவா வந்துவிடு

கந்தா உமைபாலா—எமைக்
காக்கும் தவசீலா
சிந்திடு உன்னருளைக் — கொஞ்சம்
தந்திட வாவாவா.

□ □ □

With the Compliments of

எபெக்ஸ் பிரிண்டிங்ஸ்
Apex Printings
No. 430, RACE COURSE ROAD,
SINGAPORE 0821.
TEL: 2969942 & 2988645

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மயிலாடும் மால் முருகன்

(பழ. இராமநாதன்)

1. கந்தனுக்கும் வேல் வேல் முருகனுக்கும் வேல் வேல்
கந்தனுக்கும் வேல் வேல் முருகனுக்கும் வேல் வேல்
(கந்தனுக்கு வேல்)

2. வெற்றிவடிவேலவனே வேங்கை மரமானவனே
வெண்பாவில் பாடுங்கடி ஒயிலாட்டம் – அந்த
வேழமுகன் தந்திடுவான் மயிலாட்டம் (கந்தனுக்கும்வேல்)

3. திருத்தணிகை வேலவனே தென்பழனி பாலகனே
கூவிக் கூவி ஆடுவது மயிலாட்டம்-இங்கே
கோலடித்து ஆடுவது ஒயிலாட்டம் (கந்தனுக்கும் வேல்)

4. எங்கள் வடிவேலனுக்கு கந்தவடி வேலனுக்கு
காவடிகள் ஆடுவது மயிலாட்டம் இங்கே
கால்மாறி ஆடுவது ஒயிலாட்டம் (கந்தனுக்கும் வேல்)

5. பச்சை மயில் பவள மயில் இச்சை தரும் இனிய மயில்
அழகு மயில் ஆடுதய்யா மயிலாட்டம் – அங்கே
ஆறுமுக வேலவனின் ஒயிலாட்டம் (கந்தனுக்கும் வேல்)

6. நீல மயில் நாகமயில் தங்கமயில் தோகைமயில்
புள்ளிமயில் ஆடுதய்யா மயிலாட்டம்-இங்கே
துள்ளி துள்ளி ஆடுவது ஒயிலாட்டம் (கந்தனுக்கும் வேல்)

7. வெள்ளி மயில் தங்க மயில் முத்து மயில் மோகமயில்
வண்ணமயில் ஆடுதய்யா மயிலாட்டம்-இங்கே
வந்தவரும் ஆடுகிறார் ஒயிலாட்டம் (கந்தனுக்கும் வேல்)

8. பங்குனியில் உத்திரமாம் பால்குடமாம் காவடிகள்
எல்லோரும் செலுத்துவது அபிஷேகம் – அந்த
எட்டுக்குடி வேலவனுக்கு அபிஷேகம் (கந்தனுக்கு வேல்)

9. வேலெடுத்து கச்சை கட்டி விதவிதமாய் மயிலேறும்
வெற்றிவடிவேலனது ஒயிலாட்டம்-இங்கே
வேகமாக ஆடுகிறார் மயிலாட்டம் (கந்தனுக்கு வேல்)

10. சந்தனம் மணக்கு தய்யா சங்கீதம் பெருகு தய்யா
சக்தியவள் மைந்தனது ஒயிலாட்டம்-அவன்
சன்னதியில் ஆடிடுவோம் மயிலாட்டம் (கந்தனுக்கு வேல்)

11. தணிகைமலை பக்தர்களே தாவித் தாவி ஆடுங்களே
தங்கவடிவேலனது ஒயிலாட்டம்-புதுத்
தண்டபாணி தந்திடுவான் மயிலாட்டம் (கந்தனுக்குவேல்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12. சரணகோஷம் போடுங்கய்யா சங்குநாதம் கேட்குதய்யா
சங்கரனின் மைந்தனது ஒயிலாட்டம்-அதே
சண்முகனின் போர்முகே மயிலாட்டம் (கந்தனுக்கு வேல்)

13. வேலவனைக் காண்பதிலே வேற்றுமைகள் தீர்ந்திடணும்
ஒற்றுமையாய் ஆடுவது ஒயிலாட்டம்-அங்கே
ஒன்றுக வழிபடவே மயிலாட்டம் (கந்தனுக்கும் வேல்)

14. உச்சியிலே சடையிருக்க உள்ளங்கையில் வேல் இருக்க
மால் மருகன் முருகனது ஒயிலாட்டம்-இங்கே
மாதரெல்லாம் ஆடுவது மயிலாட்டம் (கந்தனுக்கும்வேல்)

15. தேவர்களின் துயர் தீர்த்த தெய்வயானை மணவாளன்
திருத்தணிகை வேலனது ஒயிலாட்டம்-அடியார்
தினம் தினமும் கண்டிடவே மயிலாட்டம்
(கந்தனுக்கு வேல்)

16. வேடனுக வேஷமிட்டு வேட்டையாடி வேஷபார்த்து
வெற்றிகண்டான் கிழவனுக ஒயிலாட்டம்-அப்போ
வள்ளிதனை மணம்புரிந்தான் மயிலாட்டம்
(கந்தனுக்கு வேல்)

17. வேலவனை நம்பிடுவோம் வேதனை சொல்லிடுவோம்
வேண்டும் வரம் தந்திடுவான் மயிலாட்டம்-நாம்
வெற்றியுடன் ஆடுவது ஒயிலாட்டம் (கந்தனுக்கு வேல்)

18. துள்ளி துள்ளி ஆடிடுவோம் துஷ்டர்களை வென்றிடுவோம்
எங்கள் வடிவேலனுக்கு மயிலாட்டம்-இங்கே
எல்லோரும் ஆடுவது ஒயிலாட்டம் (கந்தனுக்கு வேல்)

19. சர்க்கரையாம் காவடிகள் சண்முகனைக் கண்டிடவே
சதுராட்டம் ஆடுதய்யா ஒயிலாட்டம்—அவன்
சன்னதியில் ஆடுமய்யா மயிலாட்டம் (கந்தனுக்கும்வேல்)

20. குன்றுகளில் குடியிருப்பான் குறைகளெல்லாம்
தீர்த்திடுவான்
கூட்டமாக ஆடிடுவோம் ஒயிலாட்டம்-அவனை
கும்பிட்டருள் பெற்றிடுவோம் மயிலாட்டம்
(கந்தனுக்கும் வேல்)

21. திருத்தணிகை வேலவனே தெருத்தெருவாய் நடந்து
வாரோம்
வறுமையெல்லாம் தீர்ந்திடவே மயிலாட்டம்-இங்கே
வரிசையாக ஆடுவது மயிலாட்டம் (கந்தனுக்கும் வேல்)

22. தந்தினத்தான் பாடுங்கய்யா! தாளமிட்டு ஆடுங்கய்யா!
கந்தனவன் ஆடுவது ஒயிலாட்டம்-நம்ம
காலில் வலிதீர்ந்திடவே மயிலாட்டம்
(கந்தனுக்கும் வேல்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கந்தன் புகழ்

நாங்க முன்னலே போரோம் — நீங்க
பின்னலே வரங்க.

கணபதியை வணங்கி நல்ல
காவியுடை அணிந்து
கந்தன்புகழ் பாடிக்கிட்டு
கால்நடையாய் நடைநடந்து (நாங்க.....)

குறைவில்லாச் செல்வம்தரும்
குன்றக்குடிக் குமரனவன்
வந்தவினைத் தீர்த்துவைக்கும்
வள்ளலவன் புகழ்பாடி (நாங்க.....

பழனிமலை மீதமர்ந்து
பாலதண்ட பாணியவன்
சிரித்துமகிழ்ந்து காட்சிதரும்
சிங்காரத்தைப் பார்த்திடவே (நாங்க.....)

ஆறுமுகம் ஆகிவந்து
ஆனந்தமாய்க் காட்சிதந்து
பக்தரையே காத்துநிற்கும்
பழனியப்பன் புகழ்பாடி (நாங்க.....)

அலையாடும் செந்தூரின்
கடலோரம் கோயில்கொண்டு
நிலையான செல்வம்தரும்
வயலூரான் புகழ்பாடி (நாங்க.....)

செட்டிமகன் தங்கக்கட்டி
சிரித்துவரும் சிங்கக்குட்டி
எங்கள்குலம் காத்துநிற்கும்
குழந்தைவேலன் புகழ்பாடி (நாங்க.....)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவர்மகள் தெய்வயானை
திருப்புனத்து வள்ளியம்மை
கூடவரும் குமரேசன்
ஆடிவரும் மயில்காண (நாங்க.....)

காவடிகள் ஆடிவரக்
காவலுக்கு வேலும்வர
வேலனவன் புகழ்பாடி
வேகமாக நடைநடந்து (நாங்க.....)

பழத்துக்காக சண்டைபோட்டு
பழனிமலை வந்து நின்று
பக்தருக்கு அருள்புரியும்
பழனியப்பன் அருள்பெறவே (நாங்க.....)

சக்திஉமை தந்ததனி
வேலெடுத்து ஆடிவந்து
பக்தர்குறை தீர்த்துவைக்கும்
சக்தி பாலன் அருள்பெறவே (நாங்க.....)

தங்கரதம் ஏறிவரும்
சிங்கார வேலனவன்
சிரித்தமுகம் பார்த்திடவே
சீக்கிரமாய் நடைநடந்து (நாங்க)

அரோகரா சத்தம்போட்டு
ஆண்டவனை நெனச்சுக்கிட்டு
வேலும் மயிலும் என்று சொல்லி
வேகமாக நடையைப்போட்டு (நாங்க.....)

கந்தன்புகழ் பாடப்பாட
கால்வலியும் ஓடிப்போச்சு
வேலும் மயிலும் என்று சொல்ல
வேதனையும் தீர்ந்துபோச்சு. (நாங்க.....)

○——○

அரு. சுப்பிரமணியம், நேமத்தான்பட்டி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாதை நலல பாதை

□——□

குறள் இலக்குவன்

பாதை நல்ல பாதை—நம்
பழனி வேலன் பாதை

வேதம் சொல்லும் பாதை — வெற்றி
வேலை வணங்கும் பாதை

நாதம் ஒலிக்கும் பாதை—கந்த
நாமம் சொல்லும் பாதை

கீதம் கேட்கும் பாதை—மாமன்
கீதை பேசும் பாதை

ஆதவன் உதயப் பாதை—ஆறு
அழகின் மாட்சிப் பாதை

பள்ளம் போக்கும் பாதை நல்ல
உள்ளம் மகிழும் பாதை

கள்ளம் நீக்கும் பாதை · உள்ள
கனிவு பூக்கும் பாதை—

முள்ளும் மலரும் பாதை—வாழ்க்கை
முதலும் முடிவும் பாதை

அள்ளும் இன்பப் பாதை—அதில்
அன்பு பொங்கும் பாதை

◁——▷

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருளாட்டம்

அருளாட்டம் முருகன் பிரம்பாட்டம்

ஆறுகால் சவுக்கையிலே அருளாட்டம்
அருளாடி ஐயா ஆடும் பிரம்பாட்டம்
கோருகிற வரம் கொழிக்கும் அருளாட்டம்
குட்டை ஐயா நமைகாக்கும் பிரம்பாட்டம்
அருளாட்டம்

சீருடனே சிறப்பளிக்கும் அருளாட்டம்
செல்வமழைத் தேன்பொழியும் பிரம்பாட்டம்
பேருடனே புகழ் பெருகும் அருளாட்டம்
பிள்ளைகளின் குறைதீர்க்கும் பிரம்பாட்டம்
அருளாட்டம்

நீறுடனே பேறுதரும் அருளாட்டம்
நெஞ்சமெல்லாம் கொஞ்சவரும் பிரம்பாட்டம்
ஆறுதலே வழங்கிவரும் அருளாட்டம்
ஆறுமுகன் உருக்காட்டும் பிரம்பாட்டம்
அருளாட்டம்

நூற்றெட்டுப் பெயர்கூறும் அருளாட்டம்
நோன்புடையார் களிப்படையும் பிரம்பாட்டம்
காற்றையுமே மணமாக்கும் அருளாட்டம்
கந்தப்பன் துணைகாட்டும் பிரம்பாட்டம்
அருளாட்டம்

பாரிலெங்கும் அருள்மணக்கும் அருளாட்டம்
பழனியப்பர் புகழ்விரிக்கும் பிரம்பாட்டம்
ஊரிலெங்கும் ஒளியூட்டும் அருளாட்டம்
உயர்வாழ்வு வழிகாட்டும் பிரம்பாட்டம்

கவிஞர். குறள். இலக்குவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எட்டடிக் குச்சு!

எட்டடிக் குச்சுக்குள்ளே — முருகா
எப்படி நானிருப்பேன்?
கொட்டி முழக்குகிறாய் ! — முருகா
கும்பிட நீவருவாய்.

சோற்றுத் துருத்தியப்பா — முருகா
சொக்கத் தங்கமில்லே!
காற்றும் ஒடிவிட்டால் — முருகா
கட்டை விழுந்துவிடும்.

ஒட்டைக் குடிசையப்பா! — முருகா
ஒன்பது வாசலப்பா !
வேட்டை ஆடுகிறேன் — முருகா
வேதனை தீரவில்லே!

பாட்டைப் பாடுகிறேன் — முருகா
பக்திக்கு நீவருவாய்!
கோட்டை கொத்தளங்கள் — முருகா
கொடிகட்டிப் பறக்குதப்பா !

ஊத்தைத் தேகமப்பா — முருகா
உள்ளத்தில் வேகமப்பா!
பாத்து நடந்திடவோ — முருகா
பாதையைக் காட்டிடுவாய்!

கண்ணுக்கு மையெழுதி — முருகா
கருத்துக்குப் பொய்யெழுதி
வண்ணக் கலவையிலே — முருகா
வழியும் தவறிடவோ?

சொல்லுக்குள் ஒடிவந்து — முருகா
சூட்சமம் ஆனவனே!
கல்லுக்குள் காந்தமய்யா ! —முருகா
கட்டுக்குள் நிற்பவனே!

காவடி ஆடியிலே — முருகா
காலடி ஆடுதய்யா!
பூவடி மணக்குதய்யா! — முருகா
புண்ணியம் கிட்டுதய்யா! —

எட்டடிக் குச்சுக்குள்ளே — முருகா
எப்படி நானிருப்பேன்!

கவிஞர். C.N. நாச்சியப்பன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கந்தன் போட்ட கணக்கு

கந்தன் போட்ட கணக்கு
தெரியவில்லை நமக்கு
வேலன் போட்ட கணக்கு
விதவிதமாய் இருக்கு.

ஒன்றும் ஒன்றும் இரண்டு
ஓம் எழுத்தும் இரண்டு

இரண்டும் இரண்டும் நான்கு
இனிய வேதம் நான்கு

மூன்றும் மூன்றும் ஆறு
முருகன் முகம் ஆறு

நான்கும் நான்கும் எட்டு
நமக்குத் திசைகள் எட்டு

ஐந்தும் ஐந்தும் பத்து
அவன் அரும்பெரும் சொத்து

சுப்பன் போட்ட கணக்கில்
தப்பு ஏதுமில்லை

கணக்குப்படி நடந்தால்
பிணக்கு ஏதுமில்லை

எனக்கு அவனும் சொன்னான்
உனக்கு நானும் சொன்னேன்.

கவிஞர்குறள் இலக்குவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பழனிக்கு ஒரு பாட்டு

பழநிக்கு ஒரு பாட்டு — அது
பண்டாரத் திருப் பாட்டு
பண்புக்கு ஒரு பாட்டு — நம்
அன்புக்கும் அது பாட்டு.

அருளுக்கு ஒரு பாட்டு — முக்தி
பொருளுக்கு அது பாட்டு
திருவுக்கு ஒரு பாட்டு — நம்
தெளிவுக்கு அது பாட்டு.

பாதைக்கு ஒரு பாட்டு — அது
ஆசைக்கு வரும் பாட்டு
தேவைக்கு ஒரு பாட்டு — அந்த
மேதைக்கு நம் பாட்டு

வேலுக்கும் ஒரு பாட்டு — தல
நூலுக்கும் அது பாட்டு
நாலுக்கும் அது பாட்டு.-- நம்
உழைப்புக்கும் அது மாற்று

சிந்துக்கு ஒரு பாட்டு — அது
செந்தமிழ்த் திருப்பாட்டு.
முந்திடும் மனம் கேட்டு — அதில்
முக்தியும் அவன் கூட்டு.

C N நாச்சியப்பன்

காவடிப் பாட்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காவடியாம் காவடி கந்தவேலன் காவடி
கண்கொள்ளா காட்சிதரும் கடம்பனுக்கு காவடி
வேல்முருகன் நாமத்திலே விதவிதமாய் காவடி.
வெற்றிவேலன் காவடி வீரவேலன் காவடி
சிங்காரவேலனுக்கு சின்னச்சின்ன காவடி
வண்ணமயில் தோகையோடு ஆடிவரும் காவடி
பழனிமலை பாலனுக்கு பால்குடத்தால் காவடி.
தென்பழனி வேலனுக்கு தேன்குடத்தால் காவடி.
சுவாமிநாத வேலனுக்கு சந்தனத்தால் காவடி.
பாலசுப்ர மண்யனுக்கு பஞ்சாமிருத காவடி.
ஆறுமுக வேலனுக்கு அழகுமயில் காவடி
வண்ணவண்ணக் காவடி வெற்றிவேலன் காவடி
மயூர நாதனுக்கு மச்சத்தால் காவடி
குன்றக்குடி குமரனுக்கு குறைவில்லாத காவடி.
பக்தரெல்லாம் கொண்டாடும் காவடியாம் காவடி
பாமாலை பாடி ஆடி நாடிவரும் காவடி
கண்கொள்ளா காட்சி தரும் கந்தவேலன் காவடி.
காவடியாம் காவடி காணவேண்டும் கண்கோடி
காவடியாம் காவடி கந்தவேலன் காவடி
கண்கொள்ளா காட்சிதரும் கடம்பனுக்கு காவடி

வேல் வேல்

சுட்டதிரு நீறெடுத்துத் தொட்ட கையில் வேலெடுத்து
தோகைமயில் மீதமர்ந்த சுந்தரம்—அந்தக்
கட்டழகு கொண்டதொரு கந்தவடி வேலவனைச்
சாற்றுவது ஆறெழுத்து மந்திரம் —சுட்ட

ஆறெழுத்து மந்திரத்தை தந்ததொரு சுந்தரத்தை
அந்திபகல் நிந்தனை செய் நெஞ்சமே—அந்த
ஆறெழுத்து மந்திரத்தை யாரெடுத்து ஓதினாலும்
ஆறுமுகம் வந்து நிற்கும் முன்னமே —சுட்ட

கந்தனடியே நினைந்து சங்கத்தமிழ் மாலைகொண்டு
வந்தனை செய்வோர்கள் மனம் ஆறுமே—பரங்
குன்று வளர் குகனேடு தங்கிவரவே நமக்குள்
பொங்கி வரும் செல்வம் பதினாறுமே —சுட்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எச்சரிக்கை

சீர்வள ருங்கதிர் மாமலே மேவிய
செந்தமிழின் வாசா
செந்தமிழின் வாசா இந்தப்
பாருலகத்தில் அடியவர் போற்றிடும பாலகுமரேசா
வானவர் தானவர் மாமுனி வோர்த்தொழும்
வான் மயில் வாகனனே
வான் மயில் வாகனனே தொந்தி
யானே முகனுக் கிளைய பராபரமாகிய வேலவனே
பச்சை மரகத மேனியுறும் வாலே
பார்வதி பாலகனே
பார்வதி பாலகனே துய்ய
நச்சர வந்துயில் ராமன் மருமகனுகிய வேலவனே
அசுரர்கள் தேகம் திடீர் திடீரென
அற்று விழத்தானே
அற்று விழத்தானே —அதிவீரமுள்ள வெற்றி
வேல்லிட்டெறிந்த தோர் ஆறுமுகத்தோனே
கந்தா கடம்பா குகா ஞான சண்முகா
காலாயுதப் பொருளே
காலாயுதப் பொருளே—உன்னேவந்து பணிந்த
அடியவர்க்கு வரம் நந்திடும் மெய்ப் பொருளே

கட்டியம்

சண்ட பிரசண்ட வீதண்ட மூதண்டகோ
தண்டபாணிக்கு மருமகன்
தத்திமித்தாள மோடொத்து நின்ருடிய
சதாசிவன் பெற்ற முருகன்
தண்டமிழ் நிறைந்திடும் அண்டரும் முனிவரும்
தாள்வணங்கிய வேலவன்
சாலோக சாமீப சாரூப சாயுச்ச
சகல மோட்ச அதிகார கர்த்தன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகோதெப்படியெனருல

ஐங்கரற்கிளைய ஆறுமா முகவன்
ஈஸ்வரி புதல்வன் ஈராறு புயத்தோன்
வள்ளி தெய்வானை மணமகிழ் கொழுநன்
சேவற் கொடியோன் சிகிவா கனத்தோன்
கருணை கடாக்ஷ வீட்சண்ணிய அலங்காரன்
உத்தண்ட மண்டலீசுரன்
மதன மோகன வசீகரன்
பஞ்ச பான அவதாரன்
அஷ்ட ஐஸ்வரிய சம்பன்னன்
துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனன்
மந்தரமகா மாணிக்கம் மகுடாலங்காரன்
அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகன்
ஆபத் பாந்தவன் அனுதரட்சகன்

ஆனந்தகோடி அண்டங்களும் இருநூற்று இருபத்து நாலு புவனங்களும் சப்தசாகரஞ்சூழா நின்ற ஈரேழு பதினாலு லோகமும் காக்கும் வேலையே கைக்கொண்டு ஏகசக்ராதிபத்தியஞ் செலுத்தி ஒப்பற்ற சுந்தர வட்டக் குடையின் நிழலிலிருந்தாளப் பெற்ற சிவசுப்பிரமணியக் கடவுள் அன்னதான முதல் பற்பல தானங்கள் செய்து இன்றைய தினம்.

பாரில் வாழ் அனைவோரையும்
அருள் புரிந்தென்றும் ஆள்கிறேமென்றும்
தீர்த்தப் பிரசாதம் திருநீறு கொடுத்து
பாவையராட பல்லிய முழுங்க
நாவலர் போற்ற நல்விருதுடனே
குவலயம் புகழும் குன்றையம்பதியில்
விண்ணளவோங்க எண்ணிலா வணிகர்
பொன்னிழைத் செய்த புனித மண்டபத்திற்
நவரத்தினமும் நனிபெற இழைத்த
தமது ரத்தின சிம்மாசனக் கொலுவிற்கு
எழுந்தருளி வருகின்றார் வெகுபரூக் எச்சரிக்கை

● சண்முகநாதன் திருவடி சரணம் ●

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மங்களம்

ஆதிபரஞ் சோதிக்கும் அபிராமிக்கும் ஜெயமங்களம்
மாதுவள்ளி தெய்வானைக்கும் வடிவேலர்க்கும் சுபமங்களம்
திருவுக்கும் திருமாலுக்கும் தேவ தேவர்க்கும் ஜெயமங்களம்
குருவுக்கும் சுமரேசர்க்கும் குறமாதுக்கும் சுபமங்களம்
மாலருள் பிர்ம தேவர்க்கும் கலைமாதுக்கும் ஜெயமங்களம்
அலைசூழ்கதிர் காமம்வாழ் முருகையர்க்கும் சுபமங்களம்
செந்தமிழ்க்கவி யாளர்க்கும் புரியாளர்க்கும் ஜெயமங்களம்
கந்தனூறு முகன்வேல் முருகையர்க்கும் சுபமங்களம்.

*

வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீர் அடியார் எல்லாம்.

—***—

தீப ஆராதனை

அறிந்தும் அறியாமலும், தெரிந்தும் தெரியாமலும், செய்த சகல குற்றங்களையும் பொறுத்துக் காத்து அருள்புரிய வேண்டும்

ஓம் குன்றுதோராடும் குமரனடியே
சரணம் — முருகையர்.

''சுபம்''

In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

With the Compliments
of

A. MANIVANNAN (MARK)
Million Dollar Producer

Representing
The Great Eastern Life Assurance Co. Ltd.
#10-06, South Bridge Centre, Singapore 0105
Off: Direct: 5330488 Res: 3446324 Pager: 5095725

Specialising in
• Family Security Plan • Education Plan
• Retirement Plan • Partnership/Keyman Plant Other
• Financial Planning Services

With the Compliments
of

DEVOTEES

CC-0. In Public domain. Digitization Muthulakshmi Research Academy

With the Compliments of

Continental Medical Supply Pte Ltd

1, NORTH BRIDGE ROAD, 20-01,
HIGH STREET CENTRE, SINGAPORE 0617
TEL: 3373062 FAX: 3374154 TLX: RS 38295

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

With the Compliments of

Sayeed Muhammad & Sons Traders

IMPORTERS, EXPORTERS & WHOLESALERS

- Spices pulses lentils nuts & produce goods
- Basmati Rice
- Cashews & Almonds

43, Hongkong Street, Singapore 0105
Robinson Road P.O. Box 2668, Singapore 9046
Cable: RILWAN Telex: RS 20055 SAYEED
Phones: 5325474 (3 lines) Fax: (65) 5325432

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

With the Compliments of

Samy's Curry Restaurant

"WE SERVE TYPICAL NORTH & SOUTH INDIAN CUISINE"
AT
SINGAPORE CIVIL SERVICE CLUB

Blk. 25 Dempsey Road, Singapore 1024. Tel: 4722080
Business Hours: Monday to Sunday & Public Holidays
Except Every Thursday's Evening.
From 11 a.m. to 3 p.m., 6 p.m. to 10 p.m.

(WE CATER FOR ALL OCCASIONS)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

With the Compliments

of



LDH TRADING CO. PTE. LTD.

Importers - Exporters - Manufacturer of Electronics Products

9, Kaki Bukit Road, #04-26
Gordon Warehouse Building, Singapore 1441
Tel: 7471422 Fax: 7471138 Tlx: RS 36441 WUISIN

With the Compliments

of

DIREX MEDICAL SYSTEM (S) PTE LTD

9, Kaki Bukit Road, #04-26
Gordon Warehouse Building, Singapore 1441
Tel: 7471422 Fax: 7471138 Tlx: RS 36441 WUISIN

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

With Best Compliments

From

B. H. ONG

GEORGE LIM

A. SWAMINATHAN

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

With the Compliments of

MALHAR SYSTEMS (FAR EAST) PTE LTD

150, ORCHARD ROAD, #09-03,
ORCHARD PLAZA, SINGAPORE 0923
TEL: 2352655, 2352650, 2351407
TELEX: RS 56761 MLHRFE FAX: 2355090

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

With the Compliments of

WENDER SHIPPING FREIGHT SERVICES

163, Tras Street, #04-03,
Lian Huat Building, Singapore 0207
Tel: 2246744 (3 Lines) Telex: RS 26418 WENDER
Fax: 2230972

- SHIPPING AGENTS
- SHIP BROKERS
- CHARTERING & FREIGHTING SERVICES

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

With the Compliments of

Filsin Investment Consultants Pte. Ltd.

No. 1, Magazine Road, #05-34,
Central Building, Singapore 0105
Tel: 5325845/5332422
Fax: 5332729

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

With the Compliments of

DELHI DEVELOPMENT CONTRACTORS

Specialise in:
Sub-Contract Works, Bar Bending, Painting,
Steel Fixing, Compounding, Carpending,
Welding, Brick Laying & Concreting,

24 PECK SEAH STREET
#07-10 NEHSONS BUILDING
SINGAPORE 0207
TEL: 2248397, 2233119